15.11.2017

தினமலர்

## மேட்டூர் அணை நவ., 17ல் திறப்பு

சென்னை மேட்டூர் அணையின் கிழக்கு மற்றும் மேற்கு கரை வாய்க்கால்களில் : இருந்து, எள் மற்றும் நிலக்கடலை சாகுபடிக்கு, முதற்கட்டமாக, தண்ணீர் திறந்து விடும்படி, விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்அதை ஏற்று ., நவ., 17 முதல், 13 நாட்களுக்கு, தண்ணீர் திறந்து விட, முதல்வர் பழனிசாமி உத்தரவிட்டு உள்ளார் . இதனால், மேட்டூர் அணையின், கிழக்கு கரை வாய்க்கால் பாசன பகுதியில், 27 ஆயிரம் ஏக்கர், மேற்கு கரை வாய்க்கால் பாசன பகுதியில், 18 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்.

## காற்றழுத்த தாழ்வு ஒடிசாவுக்கு நகர்வு : இன்று முதல் மழை குறையும்



சென்னை உள்ளிட்ட கடலோர மாவட்டங்களில் நிலை கொண்டிருந்த காற்றழுத்த தாழ்வு பகுதி, ஆந்திரா மற்றும் ஒடிசாவை நோக்கி நகர துவங்கிஉள்ளதுஅதனால் ., இன்று முதல் சில நாட்கள் மழை குறைய வாய்ப்புள்ளது என, வானிலை ஆய்வு மையம்

தெரிவித்துள்ளது.
வடகிழக்கு பருவமழையின் தொடர்ச்சியாக, சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் கடற்பகுதியை ஒட்டி, வங்க கடலில் காற்றழுத்த தாழ்வு பகுதி உருவானது.

விட்டு விட்டு மழை இது :, நான்கு நாட்களாக, தமிழகத்தின் வடகிழக்கு மாவட்டங்கள் அருகே நிலை கொண்டிருந்ததுஅதனால் ., மூன்று நாட்களாக சென்னையில் விட்டு, விட்டு மிதமான மழை பெய்ததுநேற்று மாலை முதல் ., காற்றழுத்த தாழ்வு பகுதி, ஆந்திரா மற்றும் ஒடிசாவை நோக்கி நகர துவங்கி உள்ளது வடகிழக்கு கடலோர . மாவட்டங்களை ஒட்டிய பகுதிகளில் உள்ள மேக கூட்டங்களும், வடக்கு நோக்கி நகர்வதால், சென்னையில் மழை அளவும் குறைந்துள்ளது.
இதை தொடர்ந்து, சென்னை மற்றும் சுற்றுப்புற மாவட்டங்களில், இன்று முதல் மழை வெகுவாக குறையும் எனவும், ஒடிசா மற்றும் ஆந்திராவில் கடலோர பகுதிகளில், கனமழைக்கு வாய்ப்புள்ளது எனவும், இந்திய வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

மேகமூட்டம் சென்னை வானிலை மைய இயக்குனர் :, பாலச்சந்திரன் கூறியதாவது: காற்றழுத்த தாழ்வு பகுதியின் நகர்வை பொறுத்து, மழை அளவு படிப்படியாக குறையும்தற்போது ., குறிப்பிடும்படியாக மழை எச்சரிக்கை எதுவும் இல்லை வரும் . நாட்களில், தமிழகத்தில் சில இடங்களில், லேசான மழை இருக்கும் சென்னையில் . ஒரு சில இடங்களில் லேசான மழைக்கு .வானம் மேகமூட்டத்துடன் காணப்படும் .வாய்ப்பு உள்ளது
இவ்வாறு அவர் கூறினார்.

பொன்னேரியில், 7 செ.மீ., : நேற்று காலை, 8:30 மணியுடன் முடிவடைந்த, உச நேரத்தில், பொன்னேரியில் அதிகபட்சமாக, 7 செ.மீ., பதிவாகி உள்ளதுபாம்பன் ., ராமேஸ்வரம், எண்ணுார், 6; புழல், செங்குன்றம், 5; சோழவரம், 4; சென்னை டி.பி.ஜி., அலுவலகம், பரமக்குடி, தாமரைப்பாக்கம், சென்னை நுங்கம்பாக்கம், மாதவரம், 3; சென்னை அண்ணா பல்கலை, பூந்தமல்லி, பூண்டி, தரமணி, சென்னை விமான நிலையம், இளையான்குடி, 2 செ.மீ., மழை பதிவாகி உள்ளதுராமநாதபுரம் ., திருவள்ளூர், பூந்தமல்லி, மதுரை, நாமக்கல், கொளப்பாக்கம், திருச்செங்கோடு,

செம்பரம்பாக்கம், முசிறி, மேட்டுப்பட்டி, மங்களாபுரம், ஈரோடு, சோழிங்கநல்லூார் மற்றும் திருப்பூரில், 1 செ.மீ., மழை பெய்துள்ளது.

- நமது நிருபர் –

## பருத்தியில் நோய் தாக்குதலால் விவசாயிகள் பாதிப்பு:கட்டுப்படுத்த ஆலோசனை வழங்க வலியுறுத்தல்

தேவதானப்பட்டி:பெரியகுளம் தாலுகாவில் ஆயிரம் ஏக்கரில் பருத்தி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. சில இடங்களில் பருத்தி செடியில் நோய் தாக்குதல் உள்ளது. இதனால் பாதிப்பில் உள்ள விவசாயிகள் வேளாண்மைத்துறை அதிகாரிகள் வயல்வெளிகளை பார்வையிட்டு நோய்தடுப்பு ஆலோசனைகளை வழங்க வேண்டும் என வலியுறுத்துகின்றனர்.

பெரியகுளம் தாலுகா ஜெயமங்கலம், குள்ளப்புரம், கோவில்புரம், பொம்மிநாயக்கன்பட்டி, அ.வாடிப்பட்டி, முதலக்கம்பட்டி, சங்கரமூர்த்திபட்டி, எருமலைநாயக்கன்பட்டி உட்பட பல கிராமங்களில் ஆயிரம் ஏக்கரில் பருத்தி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. நடவு செய்து 50 நாட்களில் இருந்து 60 நாட்கள் ஆகிறது.தற்போது பூ பூத்து காய்காய்க்கும் பருவத்தில் செடிகள் உள்ளன. பத்து ஆண்டுகளுக்கு பிறகு பருத்தி சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். இந்நிலையில் கடந்த சில நாட்களாக பருவ நிலை மாற்றம் காணப்படுகிறது. குறிப்பாக அதிகாலையில் மூடுபனி, குளிர், பகலில் வெயில், மாலையில் சில்லென காற்று என உள்ளது. இதனால் பருத்தி செடிகளில் நோய்தாக்குதல் காணப்படுகிறது. குள்ளப்புரம் உட்பட சில கிராமங்களில் அசுவினி மற்றும் இலை சுருட்டல் நோய் தாக்கி செடிகள் காய்கின்றன.

நோய் தாக்குதலை கட்டுப்படுத்தும் வழி தெரியாமல் விவசாயிகள் மருந்துக்கடைகளுக்கு சென்று அவர்கள் தரும் மருந்துகளை தெளிக்கின்றனர்.வேளாண்துறை அதிகாரிகள் வயல்வெளிகளுக்கு வந்து நோய் தாக்குதலை கட்டுப்படுத்த உரிய ஆலோசனை வழங்க வேண்டும் என வலியுறுத்துகின்றனர்.

## இயற்கை மூலிகை பூச்சி விரட்டி



பயிர்களை தாக்கி அழிக்கின்ற பூச்சிகளை கட்டுப்படுத்தவும் அழிக்கவும் பயன்படும் தாவர இலை கரைசலையே மூலிகை பூச்சி விரட்டி என அழைக்கின்றோம் இயற்கை . விவசாயிகள் மட்டுமே ரசாயன பூச்சி கொல்லிகளுக்கு மாற்றாக மூலிகை பூச்சி மூலிகை பூச்சி விரட்டி தயாரிக்க .விரட்டியை பயன்படுத்தி வருகின்றனர் பயன்படுத்தப்படும் தாவர வகைகளின் எண்ணிக்கையை வைத்து அதனை ஐந்திலை, மூவிலை மூலிகை பூச்சி விரட்டி எனலாம்.

**மூலிகை பூச்சி விரட்டி:** எருக்கு, தங்க அரளி, சிறியா நங்கை, நொச்சி, ஆடாதொடா, தும்பை, பார்த்தீனியம், ஊமத்தை, துத்தி, உண்ணிச்செடி, எட்டி, சீதா இலை, சீமைக் கருவேல், காட்டாமணக்கு, புகையிலை உள்ளிட்ட தாவரங்கள் கசப்பு தன்மை மிகுந்ததுஇவைகளை கால்நடை .ஒடித்தால் பால் வடியும் .கள் உட்கொள்ளாது . மூலிகை பூச்சி விரட்டி தயாரிக்க தேவைப்படும் தாவர இலைகள் வீட்டின் அருகாமை, தோட்டங்கள், வயல் வெளிகள், வேலி ஓரங்களில் தென்படும் :தேவையான பொருள். ஒன்றுக்கு மேற்பட்ட தாவரங்களின் இலைகள், கல் உரல், பானை அல்லது பிளாஸ்டிக் பேரல், லிட்டர் குவளை ஆகியவற்றை தயார் நிலையில் வைக்க வேண்டும் தாவர . அவற்றை ஊற .இலைகளை சம அளவு எடுத்து இடித்து வைத்து கொள்ளவும் இடித்து வைத்துள்ள இலைகள் மூழ்கும் வரை .வைக்கும்போது விரைந்து நொதிக்கும் மாட்டுக் கோமியத்தை கலந்து பயிருக்கு தேவைப்படும் பூச்சி விரட்டியின் நீர்ம அளவை கணக்கிட்டு, அதில் 80 சதவிகிதம் அதாவது 100 லிட்டர் எனில் அதில் 80 லிட்டர் அளவிற்கு தண்ணீர் கலந்து 3, 4 நாட்கள் ஊற வைக்க வேண்டும் பின் .

இலைகளை வடிகட்டி20 சதவிகிதம் தண்ணீர் சேர்த்து கலக்க வேண்டும் .
தேர்வு .இக்கலவையை தெளிப்பான் மூலமாக பயிர்களுக்கு தெளிக்கலாம்
செய்யப்பட்ட தாவர இலைகளின் அளவை பூச்சிகளின் தாக்குதலுக்கு ஏற்ப முடிவு
செய்ய வேண்டும் ஆரம்பக்கட்ட தாக்குதலாக இருந்தால் :பயன்படுத்தும் முறை.1, 2
சதவிகித கரைசலை தயாரித்து பயிர்கள் முழுமையாக நனையும்படி தெளிக்க
வேண்டும்இதனால் பூச்சிகளின் அனைத்து பருவங்களும் அழ .ிக்கப்பட்டு விடும் .
பூச்சியின் தாக்குதல் அதிகமிருப்பின்3,5 சதவிகித கரைசல் தேவைப்படும் .
இக்கரைசலை15 நாட்களுக்கு ஒருமுறை 2,3 முறை பயன்படுத்தலாம் .1 சதவிகித
கரைசலை தயாரிக்க 1 கிலோ அளவிற்கு தாவர இலைகளை சேகரித்து, அதனை 80
லிட்டர் தண்ணீர் மற்றும் கோமியத்தில் ஊர வைக்க வேண்டும் பின் வடிகட்டி .100
லிட்டர் வருமளவிற்கு அதாவது மீதம் 20 லிட்டர் தண்ணீர் கலந்து கொண்டால் ஒரு
சதவிகித மூலிகை கரைசல் தயாராகி விடும் தொடர்ந்து ஒரே வகை மூலிகை .
மூலிகை இலைச்சாறு தானே என .செடிகளை பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டும்
அதிக அளவில் பயன்படுத்தக்கூடாது அதனால் நம்மை செய்யும் பூச்சிகள் கூட .
.சில சந்தர்ப்பங்களில் பயிர்கள் கருகி விடக்கூடும் .அழிந்து விடும்

- **டியுவராஜ்.** வேளாண் பொறியாளர், உடுமலை.

## கறவை மாடு வளர்ப்பு வளமான வாழ்க்கைக்கு வழிகாட்டி



பெண் சுய தொழில் முனைவோருக்கு கறவை மாடு வளர்ப்பு ஏற்றது பால் தேவை . நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால் பெண்கள் பலர் கறவை மாடு வளர்ப்பில் ஆர்வம் குடும்பத்தின் அன்றாட செலவுகளை பால் விற்பனை மூலம் .காட்டி வருகின்றனர் மாதம் தோறும் கணிசமாக ச .சரிக்கட்டி வருகின்றனர்ேமிக்கவும் கறவை மாடு வளர்ப்பு கை கொடுக்கிறது மதுரை மாவட்டம் புல்லூாத்து பகுதியை சேர்ந்தவர். .தனது மூன்று ஏக்கர் நிலத்தில் வாழை சாகுபடி செய்கிறார் .விவசாயி கலாதேவி கறவை மாடு வளர்ப்பில்20 ஆண்டு அனுபவம் கொண்டவர் ."விவசாயம் மூலம் கிடைக்கும் வருவாய் சேமிப்பு கணக்கிலும், கறவை மாடு வளர்ப்பு மூலம் கிடைக்கும் வருவாய் குடும்ப செலவுகளை பூர்த்தி செய்கிறது," என்கிறார்.60 லிட்டர் பால் கலாதேவி கூறியதாவது விவசாயம் செய்ய நிலம் இல்லாவிட்டாலும் சிறிய இடம் : சுய தொழில் முனைவோருக்கு .இருந்தால் போதும் கறவை மாடுகளை வளர்க்கலாம் ஏற்றது .அது ஒரு கன்று ஈன்றது .ஒரு ஜோடி ஜெர்சி இன மாடுகளை வளர்த்தேன் . தற்போது .ஒவ்வொரு ஆண்டும் கன்றுகள் பெருகியது10 கறவை மாடுகளாகி விட்டன . .பசு ஒன்று தினமும் பத்து லிட்டர் பால் தருகிறது .ஆறு மாடுகள் பால் தருகின்றன டீக்கடை ஒன்றுக்கு ஒரு லிட்டர் பால்30 ரூபாய் வீதம் 60 லிட்டர் பால் விற்கிறேன் . கூட்டுறவு சங்கங்களில் லிட்டர்21 ரூபாய்க்கு எடுப்பதால் விலை கட்டுபடியாகாது . .எனவே டீக்கடைக்கு விற்று விடுகிறேன்

மாடுகளின் வாக்கிங்காலையில் வீட்டில் இருந்து 2 கி.மீ., துாரம் மாடுகளை மேய்ச்சலுக்காக வயலுக்கு அழைத்து வருகிறேன்வயல்களில் புற்களை உண்டு ., தண்ணீர் காட்டிய பின் மாலையில் வீட்டிற்கு அழைத்து செல்கிறேன் தினமும் .4 கி.மீ., துாரம் மாடுகள் நடப்பதால் ஆரோக்கியமாக உள்ளது இயற்கையாக கிடைக்கும் . இலைகள், புற்களை உண்ணுவதால் பால் சத்து நிறைந்ததாக உள்ளது வீட்டில் . வைத்து கடலை புண்ணாக்கு, தவிட்டு புண்ணாக்கு வழங்குவதால் கூடுதல் பால் கிடைக்கிறது பின் .கன்று ஈன்ற மாதத்தில் இருந்து பால் கறவை கூடுதலாக இருக்கும் . சத்தான உணவு வழங்கினால் பால் சுரப்பு .ஒவ்வொரு மாதமும் பால் கறவை குறையும் .அதிகரிக்கும்

சினை ஊசி ரூ.500 மாட்டிற்கான சினை ஊசிக்கு 500 ரூபாய் கால்நடை மருத்துவர் . மாட்டு தொழுவத்தை சுத்தமாக .வீட்டிற்கே வந்து சினை ஊசி போட்டு செல்வார் நன்றாக .மாடுகளை தினமும் குளிப்பாட்ட வேண்டும் .வைத்து கொள்ள வேண்டும் பராமரித்தால்15 ஆண்டுகள் வரை பசுக்கள் பலன் கொடுக்கும் நானே பால் . கறப்பதால் கறவை கூலி மிச்சம் கறவை .மாடுகளுக்கு இன்சூரன்ஸ் செய்துள்ளேன் . மாடு வளர்ப்பு மூலம் திடமான உழைப்பு, சுயமாக சம்பாதிக்கும் வாய்ப்பு, யாரையும் எதிர்பார்த்து இருக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லைதனியாகவும் ., கூட்டாகவும்

சேர்ந்து தொழில் துவங்கலாம்வங்கி .பெண்களுக்கு ஏற்றது . கடன் சுலபமாக கிடைக்கிறது வளமான வாழ்க்கைக்கு வற்றாத காமதேனு போல் கறவை மாடு . வளர்ப்பு மிளிர்கிறது, என்றார் கறவை மாடு வளர்ப்பு குறித்து மாவட்டம் தோறும். .உள்ள வட்டார வேளாண் உதவி இயக்குனரை அணுகலாம்

**- காசுப்பிரமணியன்.,** மதுரை.

## ஒரு ஏக்கரில் செம்பருத்தி சாகுபடி ஆண்டுக்கு ரூ.3.5 லட்சம் லாபம்



மருத்துவத்துக்கு பயன்படும் மலர்களில் செம்பருத்தி முதலிடம் வகிக்கிறது செம்பருத்தி . மலர்கள், இலைகள் இனிப்பு சுவையும், குளிர்ச்சி தன்மையும் கொண்டது உடல் . வெப்பத்தை கட்டுப்படுத்தும், வறட்சியை அகற்றும், மலமிளக்கும், உள்ளுறுப்புகளின் புண்களை ஆற்றும், முடி வளர்ச்சி, நரைமுடி பிரச்னைகளை குணமாக்கும் . .அங்கீகரிக்கப்பட்ட பல தமிழ் மருந்துகளில் செம்பருத்தி முக்கிய இடம் வகிக்கின்றது செம்பருத்தியை தென்னையில் ஊடுபயிராக விளைவித்து லாபம் ஈட்டி வருகிறார் சிவகங்கை மாவட்டம் காரைக்குடியை சேர்ந்த எஸ் அவர்.ராமனாதன்.கே.எம். சாக்கோட்டை அருகே உள்ள நவத்தாவு கிராமத்தில் உள்ள ஏழு ஏக்கர் :கூறியதாவது குச்சி .தோட்டத்தில் உள்ள தென்னந்தோப்பில் ஊடுபயிராக செம்பருத்தி நட்டுள்ளேன் ஒன்பதாவது மாதத்தி .மூலம் பதியம் போட்டு ஆறாவது மாதத்தில் பூக்க ஆரம்பிக்கும்ல் இருந்து பூக்களை எடுக்கலாம் .15 ஆண்டு வரை பலன் தரும் .15 ஆண்டுக்கு மேலான

தென்னந்தோப்பு என்றால் மட்டுமே வெயில் நன்றாக கிடைக்கும் மானாவாரி .
ஒரு ஏக்கருக்கு .நிலங்களில் தரிசு பகுதியில் செழிப்பாக வளரும் தன்மை கொண்டது
நாள் ஒன்றுக்கு10 கிலோ பூ கிடைக்கும்காலை . ஒரு மணி நேரத்தில் இந்த பூவை
பறித்து விடலாம் இதை நிழலில் காய வைத்தால் .2.5 கிலோ கிடைக்கும் ஒரு கிலோ .
320 ரூபாய் வரை விலை போகிறதுஆறு அடிக்கு ஆறு அடி நீள., அகலத்தில் இரண்டடி
ஆழத்தில் பதியம் போட வேண்டும் .15 நாளுக்கு ஒரு முறை தண்ணீர் விட்டால்
போதும்மாவு பூச .ி சி மட்டுமே தாக்கும் இயற்கை பூச்சி விரட்டி தயார் செய்து .
செம்பருத்தி பூ மட்டுமன்றி .அவற்றை அழிக்கலாம், இலையும் நல்ல மருத்துவ குணம்
கொண்டது இலை விலை கிலோ .40 ரூபாய் ஏக்கருக்கு .20 ஆயிரம் ரூபாய் மட்டும்
முதலீடு செய்தால் போதும் ஆண்டுக்கு .3.5 லட்சம் ரூபாய் வரை லாபம் ஈட்டலாம் .
.பூவை மதிப்பு கூட்டி பவுடராக்கி விற்றால் கிலோ ரூ1,000 வரை விற்கலாம் .
செம்பருத்தி பூக்கள், இலைகளை மதுரை, கோவை வியாபாரிகள் கொள்முதல்
செய்கின்றனர்.
ஒற்றை அடுக்கில் ஐந்து இதழ்களை கொண்ட சிவப்பு பூக்கள் கொண்ட செடியே
மருத்துவத்தில் அதிகம் பயன்படுகிறது கொத்தான அடுக்கில் பல இதழ்கள் கொண்ட .
செம்பருத்தி பூவை நிழலில் .அடுக்கு செம்பருத்தி அழகிற்கு மட்டுமே பயன்படுகிறது
உலர்த்தி, சாறு எடுத்து சம அளவு தேங்காய் எண்ணெய் சேர்த்து வாணலியில் இட்டு
காய்ச்சி வடிகட்டி தலையில் தேய்த்து வர தலைமுடி கருத்து அடர்த்தியாக வளரும்,
என்றார்.
செம்பருத்தியில் செழிப்பான லாபம் பெற விரும்புவோர் :89032 24222.-

**தசெந்தில்குமார்.,** காரைக்குடி.

## கொய்யாவில் வாடல் நோய்மேலாண்மை அவசியம் :



கொய்யாவில் வாடல் நோயானது ஐந்து வயதுக்கு மேற்பட்ட மரங்களில் தோன்றுகிறது இதனால் பாதிக்கப்பட்ட .மரங்களின் இலைகள் மஞ்சள் நிறமாக மாறும் பாதிக்கப்பட்ட மரங்களில் .பின் இலைகள் பழுத்து கீழே உதிர்ந்து விடும் . பாதிக்கப்பட்ட மரங்களில் இருந்து .இருந்து புது தளிர்கள் மற்றும் பூக்கள் தோன்றாது வே .தோன்றும் காய்கள் சிறியதாகவும் கல் போன்று கடினமானதாகவும் காணப்படும்ர் பகுதி அழுகியும், பட்டைகள் எளிதாக உறிந்து விடும் நிலையில் காணப்படும் முற்றிய . மரம் .நிலையில் மரக்கிளைகளில் உள்ள இலைகள் அனைத்தும் உதிர்ந்து விடும் கட்டுப்படுத்தும் முறைகள் களைச் செடிகளை.முழுவதும் வாடி இறந்து விடும் அப்புறப்படுத்தி வயல்வெளிகள், சுற்றுப்புறங்களை சுத்தமாக பராமரிக்க வேண்டும் . .தேவையான உரம் மற்றும் நீர் அளித்து மரத்தை வீரியத்துடன் பராமரிக்க வேண்டும் வாடல் நோய் தாக்குதலின் அறிகுறிகள் தென்பட்டால் ஒரு லிட்டர் நீருக்கு ஒரு கிராம் கார்பன்சிம் மருந்தை கலந்து நோய் தாக்கிய மரத்தின் தூரை சுற்றி வேர்ப்பகுதி நனையும்படி மருந்து கலவையை ஊற்ற வேண்டும்.

- பேராசிரியர் **மகுணசேகரன்.**தலைவர், பருத்தி ஆராய்ச்சி நிலையம்ஸ்ரீவில்லிப்புத்தூர்.

**மீன்**



தென்னிந்தியாவில் உணவுக்காகவும், அலங்காரத்திற்காகவும் வளர்க்கும் மீன்கள் உற்பத்தி அதிகமாகி வருகிறது குறிப்பாக .தமிழகத்தில் மீன் வளப் பல்கலை வழங்கும் பயிற்சிகள், விழிப்புணர்வு, உதவிகள் மூலம் பலர் வண்ண மீன்கள், பலவகை உணவு மீன்கள், இறால் மீன்கள் உற்பத்தியில் ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகின்றனர் வண்ண . மீன்களை உற்பத்தி செய்து பல மாநிலங்களுக்கும், நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யும் தொழில் அதிகரித்து வருகிறதுமத்திய ., மாநில அரசுகளின் மீன் துறைகள், மீன் வளர்ச்சி கழகங்கள், முகமைகள் கொடுக்கும் பயிற்சி, கடன், மானியம் ஆகியவற்றால் இந்தியாவில் வளர்ப்பு மீன் உற்பத்தி 5 லட்சம் பண்ணைகளை கடந்து விட்டது.1,000 கோடி டாலர்கடல் உணவு பொருட்கள் அதிகம் ஏற்றுமதி செய்யப்படுகிறது .2009 - 10ல் 560 கோடி டாலராக ஏற்றுமதி இருந்தது படிப்படியாக வளர்ந்து .2020 ல் 1,000 கோடி டாலராக உயரும் என அரசு மதிப்பிட்டுள்ளது செயற்கைக் கோள் தொழில் . நுட்பம் ஆப் மூலம் கண்காணிப்பு, பல வகை ஆராய்ச்சிகள், பயிற்சிகள், மார்க்கெட் உதவிகள், ஏற்றுமதி மானியம், இவற்றால் இது சாத்தியமாகி வருகிறது வளர்ப்பு . மீன்கள், வண்ண மீன்கள் வளர்ப்பு மூலம் தொழில் முனைவோர், தீவன

உற்பத்தியாளர்கள், ஊழியர்கள், வணிகர்கள் வேலை வாய்ப்பு பெறுகின்றனர் .

விபரங்களுக்குwww.tn.gov.in/fisheries, www.india.gov.in/agriculture.

**--எம்ஞானசேகர்.** விவசாய ஆலோசகர், சென்னை.